**முசலி பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 சித்திரை 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 பங்குனி 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமைஅதிபதியின் அறிக்கை 2014 மார்கழி 24 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 <u>அபிப்பிராயம்</u>

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

### 1.3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதான பேரேட்டின் சொத்து, பொறுப்பு, வருமானம், மற்றும் செலவினங்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் பூரணமமானதாக பேணப்படாததுடன் நாட்குறிப்புப் பதிவின் மூலம் சீராக்கங்களைச் செய்தமைக்கு நாட்குறிப்பு பதிவுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 571,665 தொகையினை வருமானக் கணக்கில் கணக்கிடப்படாமையினால் வருமானம் ரூபா 571,665 தொகையினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாணடில் காணி மற்றும் காணி சீர்திருத்த அமைப்பு செலவீட்டுப் பெறுமதி ரூபா 639,548 கணக்குகளுக்கு கொண்டு வரப்படாமைால் சொத்துக் கணக்கிலும் திரண்ட நிதி கணக்கிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(உ) 2013 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டின் செலுத்த வேண்டிய ரூபா 283,008 தொகையால் செலவினத்திற்கு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாமையினால் செலவினக் கணக்குக் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

1.3.2 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும், முகாமைத் தீர்மானங்கள், என்பனவற்றிற்கு இணங்காதத சந்தர்ப்பங்கள் கணக்கர்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு | | இணங்கி நடவாமைகள் |
|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) | | |
| (i) | விதி இலக்கம். 5 (xii) | காசு,களஞ்சியப் பொருள் மதலியவற்றடன் தொடர்பு கொண்டுள்ள உத்தியோகத்திரிடமிருந்து போதுமான பிணைப் பணங்களை பெற்றுக் கொள்ளப்பட்டமையை தவிசாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (ii) | விதி இலக்கம். 13-14 (2) | ஆங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கு மிகையாக சபையின் நிதி ரூபா 2,813,071 மிகையாக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செலவுகளுக்காக குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் மேலதிகச் செலவுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | விதி இலக்கம். 59 | ஓவ்வோராண்டு தொடக்கத்திலும் வியாபார நிறுவனங்களின் கணிப்பீடொன்றை மேற்கொண்டு வியாபாரங்கள் பற்றிய நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (iv) | விதி இலக்கம். 218 | மீளாய்வாண்டு அறுதியில் காணி, கட்டிடங்கள், சொத்துக்களுக்கு மெய்மையாய்வு மெற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ஆ)இலங்கை சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| i. | நிதிப்பிரமாணம் 371 (5) யும் 373 (1) | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பண நிலுவை பெறுமதி ரூபா 533,061 தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. | நிதிப்பிரமாணம் 571 (2) | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவறான காலங் கடந்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 405,510 தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| இ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் திருத்தப்பட்ட 1988 இன் 86 ஆம். | | சபையால் 02 அறுவைச் சாலைக்கு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை |
| ஈ) 28 நவம்பர் 2002 ஆந் திகதிய திறைசேறி சுற்றறிக்கை இலக்கம் IAI /2002/02 | | கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு நிலையான சொத்து பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை |

| | |
|---|---|
| உ) 2006 ஆம் ஆண்டின் அரசாங்க பெறுகை வழிகாட்டி | |
| அத்தியாயம் iii பிரிவு 3.4.3 | வருடாந்தம் வழங்குநரைப் பதிவு செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2013 மார்கழி 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவின மிகையாக ரூபா 2,318,791 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 178,194 ஆகவும் விளைந்திருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கான மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விபரம் | மதிப்பீட்டு வருமானம் | உண்மை வருமானம் | திரட்டிய நிலுவை 31.12.2013 உள்ளபடி |
|---|---:|---:|---:|
| வாடகைகள் | 2,550,000 | 2,491,587 | 689,000 |
| உரிமங்கள் | 270,000 | 1,095,000 | - |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | 1,245,000 | 777,025 | - |
| பற்றாணைச்செலவுகள் குற்றப் பணங்கள், தண்டங்கள் | 600,000 | - | - |
| ஏனைய வருமானங்கள் | 243,500 | 107,085 | 171,344 |
| **மொத்தம்** | **4,908,500** | **4,470,697** | **860,344** |

**2.2.2 முத்திரைத் தீர்வைக் கட்டணம்**

2006 அம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரைக்கும் அறவிடப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா 2,363,894 தொகையினை அறவிடுவதறகு இது வரைக்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.3 அறவிடப்படவேண்டியுள்ள வருமானம்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டு மற்றும முன்னைய ஆண்டுகளில் சபைக்கு கிடைக்க வேண்டிய கடை வாடகை, உழவு இயந்திர வாடகை மற்றும் இறைச்சிக்கடை வாடகை என்பவற்றிலிருந்து ரூபா 689,000 நிலுவையாக இருந்து. அந்த தொகையினை அறவீடு செய்வதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை

அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 1988 இன் பிரதெச சபை நிதி, நிருவாக, சட்ட விதிகள் என்பவற்றின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

**(இ) வாகனப் பாவனை**

சபையின் பயன்பாட்டில் காணப்படும் 41 வாகனங்களுக்கான நாளாந்த வாகன ஓட்ட அறிக்கை வாகன எரிபொருள் பதிவேடு வாகன சம்பவ நிகழ்வுப்பதிவேடு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்களை கணக்காய்வுக்கு உட்படுத்திய போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் பயன்பாட்டில் காணப்படும் 28 வாகனங்களுக்கும் வருமான உத்தரவு பத்திரங்கன் மற்றும் காப்புறுதி கட்டணங்கள் பெறப்படாமல் இருந்தது.

(ii) சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் அனைத்து வாகனங்களுக்குமான நாளாந்த வாகன ஓட்ட அறிக்கை நிதியாண்டில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 10 ஒக்டோபர் 1990 திகதியிட்ட 41/90 இலக்க சுற்றுநிருபதிற்க்கு அமய சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் அனைத்து வாகனங்களுக்கும் 6 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவில்லை.

(iv) சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 41 வாகனங்களையும் சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்க்கு இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்கப்படிருக்கவில்லை.

### 3.2 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்

சபையினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் வாகனங்கள் மற்றும் கொங்கிறீட் மிக்ஸ்சர் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள போதும் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. விபரம் பின்வருமாறு.

| வாகன இலக்கம் | வாகன வகை | பயன்படுத்தப்படாத காலம் |
|---|---|---|
| 3191 | அறுவடை இயந்திரம் | 03 வருடங்கள் |
| - | கொங்கிறீட் கலவை இயந்திரம் | 03 வருடங்கள் |
| LE 6500 | தண்ணீர் பௌசர் | 02 வருடங்கள் |
| SH 0701 | இழுவை இயந்திரம் | 02 வருடங்கள் |
| IOM | உழவு இயந்திரம் | 02 வருடங்கள் |

**3.3 உள்ளகக் கணக்காய்வு**

------------------------------

பிரதேச சபையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிருவாகம்